IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
O.S. No. 248/2017

Deposition of PW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on **25.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சாந்தி | **Caste** | : | |
| **W/o.** | : | சக்திசரவணன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கோனூர் மேற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக கடந்த 2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அழைபபாணையில் குறிப்பிட்டுள்ள பட்டா எண்.464, சர்வே எண்.4/1E, 4/1G, 6/1 ஆகிய நிலங்களுக்கு உண்டான அடங்கல், சிட்டா, FMB, "அ" பதிவேடு ஆகிய ஆவணங்களின் சான்றிட்ட நகல் கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.4/1E, 4/1G, 6/1 சொத்திற்குரிய சிட்டா சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.1**, சர்வே எண்.4/1E 4/1G, 6/1 சொத்திற்குரிய "அ" பதிவேடு சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.2**, சர்வே எண்.4/1E 4/1G, 6/1 சொத்திற்குரிய FMB சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.3,** சர்வே எண்.4/1E 4/1G, 6/1 சொத்திற்குரிய அடங்கல் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து அருகே ராமன் நகரில் இருந்து கூனாண்டியூர் செல்லும் தார் ரோடு தென் வடலாக செல்கிறது. மேற்படி ரோட்டில் இருந்து சர்வே எண். 6F வழியாக கிழ மேலாக ரோடு செல்கிறது. மேற்படி ரோடு வாதிகள் பூமியான சர்வே எண்.4/1E சொத்து வரை செல்கிறது. மேற்படி கிழ மேல் ரோட்டை தவிர வாதிகள் வீட்டிற்கு செல்ல வேறு வழி உள்ளதா என்றால் வேறு

வழி இல்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வந்தபோதும் நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி கிழ மேல் ரோடு சர்வே எண்.167/6E, 6F மற்றும் 4/1E வழியாக செல்கிறது என்றால் சரிதான். சர்வே எண்.167/6E, மற்றும் 6F கூனாண்டியூர் கிராமம் ஆகும். சர்வே எண். 4/1E யில் தான் வாதிகளான குணசேகரன் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

**<u>3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கோனூர் மேற்கு கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண். 4/1E, 4/1G, 6/1 ஆகியவை ஆகும். மேற்படி சர்வே எண்கள் UDR க்கு முன்பு பட்டா எண். 464 எண்ணில் இருந்தது. UDR செய்த போது மேற்படி சர்வே எண். 4/1E, 4/1G, 6/1 எண்களுக்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சின்ன கவுண்டர் மகன் தைலப்பன் பெயரில் இருந்தது. அதே பட்டாவிற்கு சிட்டா மற்றும் அடங்கல் தைலப்பன் பெயரில்இருந்தது. "அ" பதிவேட்டில் சர்வே எண். 4/1E, 4/1G ஆகீய சொத்துக்களுக்கு வைத்தி கவுண்டர் என்கிற பொன்னப்பன் மகன் பொ. வெங்கடாஜலம் என்பவர் பெயரில் இருந்தது. UDR க்கு பிறகு பட்டா எண் 464 என்பது என்னவாக மாறியது என்றால் சர்வே எண்.6/1 பட்டா எண்.2282, வைத்திலிங்கம் மகன் சந்திரசேகர் என்பவர் பெயரில் மாறியுள்ளது. சர்வே எண்4/1G சொத்து பட்டா எண்.2283 வைத்திலிங்கம் மகன் குணசேகர் என்பவர் பெயரில் மாறியுள்ளது. சர்வே எண். 4/1E என்பது தற்போது 4/1E3, 4/1E6 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பட்டா எண். 3543 வைத்திலிங்கம் மகன் குணசேகரன் என்பவர் பெயரில் மாறியுள்ளது. சர்வே எண். 4/1E2, 4/1E4, 4/1E5 பட்டா எண்.3542 வைத்திலிங்கம் மகன் சந்திரசேகரன் பெயரில் மாறியுள்ளது. சர்வே எண். 4/1E1 பட்டா எண். 464 தைலப்பன் மகன் வைத்திலிங்கம் பெயருக்கு மாறியுள்ளது. மேற்படி சொத்துக்களுக்குரிய சிட்டா, அடங்கல், ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண். 4/1E

சொத்தில் மட்டும் பாதை செல்கிறது. ஆனால் எங்களது வருவாய் ஆவணங்களில் சர்வே எண். 4/1E யில் பாதை என்று குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 167/6E மற்றும் 167/6F ஆகீயவை கூனாண்டியூர் கிராம கணக்கு ஆவணம் ஆகும். அதனால் மேற்படி சொத்துக்களுக்கு உரிய கிராம கணக்கு ஆவணங்களை என்னால் கொண்டு வர முடியாது என்றும், அவற்றை நான் கொண்டு வரவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 167/6E மற்றும் 167/6F சொத்தில் தடம் செல்வதாக சாட்சியமளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பாணையில் சர்வே எண். 167/6E மற்றும் 167/6F சொத்தில் தடம் செல்கிறதா என்று பார்த்து வரும்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் அது குறித்து பார்வையிடவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை

ஒம்/-சாந்தி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.